2018 ஜூன் 1]

(இ) பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கலைக் கல்லூரிகளாக மாற்றம், புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம், உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்குதல், வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு வருடங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 56 அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 19 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் கல்வித் துறையில் இந்த ஆண்டு செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்:*

1) தமிழ்நாட்டிலுள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அனைத்தும் நடப்புக் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஆண்டிற்கு 152 கோடியே 20 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினம் ஏற்படும்.

2) 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் 2017-2018 ஆம் கல்வியாண்டு வரை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,232 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்பாடப் பிரிவுகளைக் கையாளுவதற்கு 683 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கென அரசுக்கு தொடரும் செலவினமாக 68 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பாடப் பிரிவுகளின் தேவைக்கென 324 வகுப்பறைக் கட்டடங்கள், 50 ஆய்வகங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் 62 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 1

3) தமிழ்நாட்டில் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூரில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளிலுள்ள அரசு விடுதிகளில் தலா 150 மாணாக்கர்கள் தங்குவதற்கு ஏதுவாக 3 நபர்கள் தங்கும் வசதியுள்ள 50 அறைகள் கொண்ட விடுதிகள் 37 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

(ஈ) கோவை மற்றும் திருச்சியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டுதல், தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் எச்.டி. செட் டாப் பாக்ஸ் வாயிலாக டிஜிட்டல் கேபிள் டி.வி. சேவையினை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளப்பரிய வளர்ச்சியினை அடைந்து இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் பொது மக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அதனை முன்னெடுத்துச் செல்ல பல நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.*

அந்த வகையில், நடப்பாண்டில் செயல்படுத்தவுள்ள பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தொழில் முனைவோர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த வணிகத்தைத் தொடங்க ஏதுவாக, கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் உள்ள எல்கோசெஸ்ஸில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் திருச்சியில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், இரண்டு தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)